They are not even graduates. They may have experience in the department but there are a lot of qualified Deputy Commissioners and why don't you give them an opportunity to fill up such posts ? It is only after exhausting their list, you can go in for others.

இது அரசாங்கத்துதிற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, பட்டதாரி அல்லாதவர்கள் இதுமாதிரி வேலைக்கு அமர்த்தியிருப்பதாக கனம் உறுப்பினர் திரு. கே. விநயகம் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி அமர்த்தப் பட்டதாக அரசாங்கத்திற்குத் தகவல் இல்லை. அப்படி அமர்த்தியிருந்தால் அதுபற்றி விசாரிக்கிறேன். சட்டம் படித்தவர்களைத்தான் நியமிக்க வேண்டு மென்பதை கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளலாமே தவிர, அரசாங்கத்தில் சீனியாரிடி பிரகாரம் அமர்த்த வேண்டியிருக்கிறது. சீனியாரிடியை மீறுவதில் சட்டச் சிக்கல் இருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, ஆண்டு ஒன்றுக்கு ஐந்து லட்சம் ரூபாய்க்கு மேல் வியாபாரம் செய்யும் வியாபாரிகள் செலுத்து கின்ற விற்பனை வரிக்கு சர்சார்ஜ் விதிக்கப்படுகிறது. இப்படி வரிக்கு மேல் வரி வசூல் செய்வதற்கு பொது விற்பனை வரிச் சட்டத்தில் இடம் இருக் கிறதா? வர்த்தக வரி கெஜட் 1968-க்குப் பிறகு வரவேயில்லை. வியாபாரிகள் எல்லோரும் எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் விற்பனை வரிச் சட்டத்தை ஆங்கிலத்திலும், தமிழிலும் வெளிக் கொணர ஏற்பாடு செய்யப் படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, நேற்று நடை பெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் இதுபற்றி யெல்லாம் விவாதிக்கப்பட்டது. வியாபாரிகள் அவ்வப்பொழுது எழுகிற சந்தேகங்களைக் கேட்டால், அதற்கு விளக்கம் தர அரசாங்கம் ஒப்புக் கொண்டிருக்கிறது. எந்த வியாபாரி சந்தேகம் கேட்டாலும், அதை கெஜட் மூலமாக விளக்குவோம்.

4. அமைச்சரின் விளக்க உரை.

நிதிநிலை அறிக்கை உரையில் தான் அறிவித்திருந்த கூடுதல் வரவினங்கள் பற்றிய செயற்குறிப்புகள் குறித்து சில சலுகைகள் வழங்குதல் பற்றி நிதி அமைச்சர் அளித்த விளக்க உரை.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Mr. Speaker, Sir, I rise to make a statement on certain concessions in respect of the proposals for additional mobilisation of resources which I had announced on 26th February 1970, in my Budget speech.

1. The Government have fully considered the representations made in regard to the surcharge on sales tax proposed in the Budget speech. With the permission of the Hon. Chief Minister, I have pleasure in announcing a reduction of the proposed rate in respect of the additional levy on assessees with a turnover exceeding Rs. 5 lakhs, from 7-1/2 per cent to 5 per cent. The Government have also decided that the levy will be brought into force from the assessment year 1970–71 onwards. I hope that all sections of the

1970 மார்ச் 18] [Thiru K. A. Mathialagan]

House and the people will welcome these concessions and recognise our willingness to help the business community in spite of the serious financial difficulties faced by the Government.

2. Another concession which I have the privilege to announce relates to the proposed increase in sales tax rates from 12 to 15 per cent in respect of automobile tyres, batteries and automobile spare parts. Keeping in view the prevalent rates in the neighbouring States, the Government have decided to restrict the increase in respect of these items to 13 per cent only.

3. The Government have also decided to give relief to the agricultural community by exempting all agricultural implements (excluding tractors, bulldozers and tillers) from sales tax. This will come into force from 1st April 1970.

3. 1970-71-ம் ஆண்டிற்கான நிதிக்கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

திரு. வ. அ. சுப்பராஜா, திரு. என். எஸ். வி. சித்தன் ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

திரு. ரா. கனகசபை, டாக்டர் ஹாண்டே, திரு. சி. கோவிந்தராசன் ஆகியோர் இருப்பிடங்களில் இல்லாததால், அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி "நிதிக் கோரிக்கை எண். 3—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,81,97,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

(ஆ) நிதிக் கோரிக்கை எண். 8-ஏ.—பால்வழங்கு திட்டங்கள்

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

நிதிக் கோரிக்கை எண் 8-ஏ—பால்வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,87,19,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்.

DR. H. V. HANDE: Sir, to discuss the need to ensure the proper supply of proper quality of cows, buffaloes and toned milk distributed by the Government Milk Depots, Madhavaram, I move—

'That the allotment of Rs. 3,87,19,600 under Demand No. 8-A—Milk Supply Schemes—be reduced by Rs. 100.'